# நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வகுப்பு II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2011

## கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வகுப்பு II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2011.12.09 ஆகும். இப்பரீட்சை 2012 ஜனவரி மாதத்தின் தினமொன்றில் கிழக்கு மாகாணத்தில் 04 பரீட்சை நிலையங்களில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

**02.** **சேவை நிபந்தனைகள்:**

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2. இந் நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அத்துடன் முதல் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05 வருடங்கள் சேவையாற்றுவதோடு கிழக்கு மாகாணத்தில் 15 வருடங்கள் சேவையாற்றுதல் வேண்டும்.

**03.** **சம்பள அளவுத்திட்டம் :**

2007.08.24 ஆந் திகதிய 6/2006(IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வகுப்பு II ற்கான மாத சம்பள அளவுத்திட்டம் ரூபா 15,215 – 10 x 215 – 4 x 240 – 7 x 320 – 15 x 360 - ரூபா 25,965 ஆகும்.

**04.** 2011.12.09ஆம் திகதிக்கு முன் சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

ஆ. கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முந்திய 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் நிரந்திரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. நன்னடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**உ. கல்வித்தகைமை :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித்தினத்திற்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளுக்குரிய பரீட்சை பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு:** மேலே 04 ”ஆ”வில் கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவரென நிரூபிப்பதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு உடன்முந்திய 03 வருடங்கள் நிரந்தரமாக வதிவதை நிரூபிப்பதற்காக பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**05.** **ஆட்சேர்ப்பு முறை :**

i. அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மாகாண சபை சுற்றறிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எழுத்துப்பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்களுக்கு ஏற்ப நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்கள். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப்பரீட்சை நடாத்துவது ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு அமைவாகவும், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

ii. இப்பரீட்சையில் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சை பெறுபேற்று அட்டவணையில் கூடிய புள்ளி பெற்ற பரீட்சார்த்திகள் (அரச பொது நிர்வாக சுற்றறிக்கை 15/90ன் விதிகளுக்கமைய) இனவிகிதாசாரா ஏற்பாடுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**06. பரீட்சைத்திட்டம் :**

பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாப் பத்திரம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |
| பொது அறிவும் மொழித்திறனும் | 100 | 1 ½ மணித்தியாலம் |

**பொது உளச்சார்பு :** இவ் வினாத்தாள் பரீட்சார்த்திகள் அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்புடைய புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல் பொருட்டு தயாரிக்கப்படும் .

**பொது அறிவும் மொழித்திறனும் :** தேசிய, பிராந்தியம் மற்றும் உலகம் பூராகவுமுள்ள பலதரப்பட்ட அமைப்பு சுற்றாடல்களிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், விஞ்ஞான, பொருளாதாரம், விளையாட்டு ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவுமுள்ள பரீட்சாத்திகளின் அறிவையும், தெளிவையும் அளவிடுவதற்கான வினாத்தாள்.

இப்பரீட்சை ஒரு போட்டிப்பரீட்சையாக இருப்பினும் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40%ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை.-**

விண்ணப்பபத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச் சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**08. பரீட்சைக்கட்டணம்.-**

பரீட்சைக்கட்டணம் ரூபா 300ஆகும். இக்கட்டணத்தை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரின் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலதேவைக்காக தன்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) பற்றுச்சிட்டு இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளசெலுத்தப்படாததுடன் காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09. விண்ணப்பிக்கும் முறை :-**

i. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய A4 (21x29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களை உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ii. உரிய மாதிரி படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவார். விண்ணப்பபடிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

iii. பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களினால் போட்டிப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் பத்திரிக்கை விளம்பரத்திற்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டிருக்கவில்லையெனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

iv. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மாகாண நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வகுப்பு II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2011 கிழக்கு மாகாணம்" என குறிப்பிடல் வேண்டும்.

v. விண்ணப்பபடிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது சத்தியப் பிரமாண ஆணையாளர், சமாதான நீதவான், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா 240,360/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர், படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

vi. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2011 டிசம்பர் மாதம் 09ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு பெறுப்பேற்கமாட்டாது.

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, (கிழக்கு மாகாணம்),
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

**10.** பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**11.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| அம்பாறை | 03 |
| கல்முனை | 04 |

**கவனிக்க:-** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்

**குறிப்பு :-**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த பரீட்சையை நடத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக பொதுச் சேவை ஆணைக்குழுவால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

எச்.ஈ.எம்.டபிள்யு.ஜீ.திஸாநாயக்க,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**மாதிரி விண்ணப்பபடிவம்**

**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வகுப்பு II இற்கு**

**ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2011**

**கிழக்கு மாகாணம்**

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
சிங்களம் - 1
தமிழ் - 2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.1. முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : SILVA,K.G.G.)

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………......

1.4. அடையாள அட்டை இல.

2.1. நிரந்தர முகவரி :- ……………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி :- ……………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.1. பால் : (ஆண் - M / பெண் - F) [ ]
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

3.2. பிறந்த திகதி : ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]

3.3. 2011.12.09ஆந் திகதிக்கு வயது

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

4.0. தெரிவு செய்யும் நகர எண்: [ ]
(11வது பந்தியில் குறிப்பிடப்பட்ட நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

5.0. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]

முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

(உரிய கூட்டினுள் √ இடவும்)

6.0. நீங்கள் இலங்கைப் பிரஜையா ? ஆம் / இல்லை [ ]

7.1. நிரந்தரமாக வதியும் மாவட்டம்: ………………………………………………………………
7.2. பிரதேச செயலாளர் பிரிவு :- …………………………………………………………………
7.3. வதியும் கால எல்லை: ...............................................தொடக்கம் .............................................. வரை

8.0. கல்வித்தகைமைகள் :

| பட்டத்தின் வகை | பட்டம் பெற்ற திகதி | பல்கலைக்கழகம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

9.0. நீங்கள் எப்போழுதாவது எத்தகையாவதொரு ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? (உரிய கூட்டினுள் √ இடவும்)

| ஆம் | |
|---|---|

| இல்லை | |
|---|---|

ஆம் எனின் விபரத்தைக் குறிப்படவும் ……………………………………………………………

10.0. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : …..………………….………………..

II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ……………………………..……………………

III. செலுத்திய பணம் : ………………………………………………..………………...

| பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும் |
|---|

11.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை ஏற்றுக்கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள இக்கூற்று பொய்யானவை எனத்தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னராயின் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

…………………………………….

திகதி : …………………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :…………………………………………………………….
முகவரி :…………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

13.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-**

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …............................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் அவருடைய பெயர்வழிக்கோவைக்கு அமைய சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………...........................................
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி :…………………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :…………………………………………………………….
முகவரி :………………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)